[5th February 1966

பஞ்சாயத்து யூனியன்களில் கணக்கர்கள்

*** 116 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன் களிலும் அக்கௌண்டண்ட் (Accountant) நியமிக்கப்பட்டுள் ளார்களா, இல்லை என்றால் காரணம் என்ன ?

(இ) ஆம் எனில், வீரபாண்டி பஞ்சாயத்து யூனியனில் (Accountant) நியமிக்கப்படாத காரணத்தால் யூனியன் தணிக்கை நடைபெறாமல் இருப்பது அரசினருக்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் அக்கௌண்டண்ட் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சில நிர்வாகக் காரணங்களால், வீரபாண்டி பஞ்சாயத்து யூனியனில் 1964-65-ல் குறைந்த காலத்திற்கு அக்கௌண்டண்ட் பதவி காலியாக வைக்கப்பட்டிருந்தது.

(இ) இல்லை, ஐயா.

UNSTARRED QUESTIONS

Express buses by private operators

1 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the hon. the Minister for Industries be pleased to state the number of express buses run by private operators in the State together with their registration numbers, the routes in which they are plying and the distance of the routes, etc., districtwise?

A.—A statement[a] is appended.

நீர்ப்பாசனத் திட்டங்கள்

*** 2 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

திருசெந்தூர் தாலூகாவில்:—

(1) புத்தந்தருவை திட்டம்,

(2) தங்கைக்குளம் சீர்திருத்த திட்டம்,

(3) கால்வாய் நொச்சிக்குளம் திட்டம்,

(4) தென்கரை உபரி ஜலத்தை சடையரிக்குளம் வகை எடுத்துச் செல்லும் திட்டம்,

(5) கடம்பாக்குளம் 7-ம் நீர்மடை ஆழங்கால் அபிவிருத்தித் திட்டம்,

(6) சீனிமாவடி Foreshore-*cum*-Drainage Scheme

(7) குலசேகரன் பட்டணம் தருவை வடிகால் திட்டம், முதலியவை எந்த நிலையிலிருக்கின்றன ?

---

[a] Printed as Appendix I on page 777–783

5th February 1966]

பதில்.—1. புத்தந்தருவைத் திட்டம் :—

இத்திட்டத்தை பாசனத் தலைமைப் பொறியாளர், திருநெல்வேலி மேற்பார்வைப் பொறியாளரைக் கலந்து, பரிசீலனை செய்து வருகிறார்.

2. தங்கைக் குளம் திட்டம் :—

பாசனத் திட்ட வட்டார மேற்பார்வைப் பொறியாளரிடமிருந்து பாசனத் தலைமைப் பொறியாளருக்கு வரைபடங்களும், மதிப்பீடுகளும் இன்னும் வரவில்லை.

(3. 4.) தென்கரை ஏரியின் அதிகப்படி நீரை நொச்சிக்குளம் சடையனேரி முதலியவற்றிற்குப் பயன்படுத்தும் திட்டங்கள் :—

இத்திட்டங்கள் குறித்து மேற்பார்வைப் பொறியாளர் பாசனத் தலைமைப் பொறியாளருக்கு விரிவான வரைபடங்களையும், மதிப்பீடுகளையும் அனுப்பினர். அவைபற்றி, தாம் எழுதியுள்ள குறிப்புரைகளைக் கவனித்து வேண்டியவாறு திருத்தி அனுப்புமாறு கேட்டு அவை மேற்பார்வைப் பொறியாளருக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

5. கடம்பாக்குளம் 7-வது ஆழங்கால் வடிகால் மதகில் தூறு வாரும் திட்டம் :—

மேற்பார்வைப் பொறியாளர் மீண்டும் அனுப்பிய வரைபடங்களையும் மதிப்பீடுகளையும், சில விஷயங்கள் குறித்து விளக்கம் தருமாறு கேட்டு பாசனத் தலைமைப் பொறியாளர் அவருக்கே மறுமுறை திருப்பி அனுப்பியிருக்கிறார்.

6. அம்மாபுரம் கிராமத்திற்கு அண்மையில் உள்ள சீனிமாவடி ஏரியில் ஏரி எதிர்வாய்க் கரையையும் வடிகால்களையும் அமைத்தல்:—

இந்தத் திட்டத்திற்கு, திருநெல்வேலி மேற்பார்வைப் பொறியாளர் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளார்.

7. குலசேகரப்பட்டினம் தருவை வடிகால் திட்டம் :—

பாசனத் தலைமைப் பொறியாளர் இதைப் பரிசீலனை செய்தார். இதற்கு மிகவும் செலவாகும் என்பதோடு, இத்திட்டத்தை நிறைவேற்றுவதும் முடியாது என்பதால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

1. *Puthan Thuruvai Scheme.*—The Scheme is under examination of the Chief Engineer (Irrigation), in consultation with the Superintending Engineer, Tirunelveli.

2. *Thangaikulam Scheme.*—The Chief Engineer (Irrigation), is awaiting plans and estimate from the Superintending Engineer, Irrigation Planning Circle.

3 and 4. *Schemes for utilising the Surplus water of Thenkarai tank to Notchikulam, Sadayaneri, etc., tanks.*—The detailed plans and estimates received from the Superintending Engineer have been returned to him by the Chief Engineer (Irrigation) for resubmission after attending to the remarks pointed out to him.

[5th February 1966

5. *Scheme for clearing silt in Alangal drain Sluice No. 7 of Kadamba tank.*—The plans and estimate resubmitted by the Superintending Engineer have again been returned to him by the Chief Engineer (Irrigation) to clarify certain points.

6. *Formation of foreshore bund and drainage Channel in the Seenimavadi tank near Ammapuram village.*—The scheme has been administratively approved by the Superintending Engineer, Tirunelveli.

7. *Kulasekarapattanam Thurivai drainage Scheme.*—The scheme was examined by the Chief Engineer (Irrigation) and it was dropped as it was not only costly but also not feasible.

தென்னாற்காடு மாவட்டத்தில் சாலைகள்

3. கேள்வி.—திரு. கே. கோபால கவுண்டர் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1954-ம் ஆண்டு முதல் 1964-ம் ஆண்டு முடிய தென்னாற் காடு மாவட்டத்தில் எந்தெந்த கிராமங்களில் ரயில்வே செஸ் நிதி யில் எவ்வளவு தூரம் ரோடுகள் போடப்பட்டன ?

(இ) இன்னும் எவ்வளவு தூரம் ரோடுகள் போட உத்தேசிக் கப்பட்டுள்ளது ?

பதில்.—(அ) 110 கிராமங்களில் 141 மைல் 1 பர்லாங் (227.12 கிலோ மீட்டர்) தூரத்திற்குச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரயில்வே செஸ் நிதியிலிருந்து வழங்கப்பட்டது. அக்கிராமங்களின் பட்டியல் [a] இணைக்கப்பட்டுள்ளது.

(இ) 52 மையில் 6½ பர்லாங் (84.99 கிலோ மீட்டர்).

1. (a) In 110 villages, roads to a length of 141 miles and one furlong 227·12 kilometres) have been laid meeting the expenditure from out of the Railway Cess fund. The list of villages is appended to this answer.

(b) Fifty-two miles and 6½ furlongs 84·99 kilometres).

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO (') DIFFICULTIES OF AGRICULTURISTS IN THANJAVUR DISTRICT.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சாவூர் மாவட்டத்தில் மழையின்மையின் காரணமாய் அண்மையில் ஏற்பட்ட வறட்சி நிலையும், தாளடிப் பயிர் காய்ந்துள்ளதும், விளைந்த தானியத்தைக் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லுமாறு கொள்முதல் அதிகாரிகள்

[a] Printed as Appendix II on pages 784–785.